# நிபந்தனைகளும் விதிமுறைகளும்

## நிதி நிறுவனங்களின் கடப்பாடுகள்

- உங்கள் முச்சக்கர வண்டியானது (Three Wheeler) குத்தகை முறை மூலம் (Leasing) நிதியளிக்கப்பட்டிருப்பின் அந்த நிதி நிறுவனத்திலிருந்து ஆட்சேபனை இல்லை என்று விளக்கமளிக்கப்பட்ட கடிதமொன்று தேவை
- நிதி பெற்றுக் கொண்டவர் அதனை அகற்றும் வரை நிதி நிறுவனமானது எஞ்சினை தம் வசம் வைத்திருக்கும். எஞ்சினின் வருமானம் விற்பனை விலையை பெற்றவுடன் குத்தகை ஒப்பந்தத்தில் வரவு வைக்கப்படும்.
- முச்சக்கர வண்டியின் (Three Wheeler); பூரண உரிமையாளர் ஒரு தனிநபராக இருப்பின், மாற்றுச் செயன்முறையின் மூலம் அகற்றப்பட்ட இயந்திரம் அந்நபருக்கு திருப்பிக் கொடுக்கப்படும்.

## உரிமையாளரின் கடப்பாடுகள்

- உரிமையாளர் முச்சக்கர வண்டியை (Three wheeler) மின்மயமாக்கல் செய்வதற்காக ஏற்பாடு செய்யப்படவிருக்கும் நிகழ்வுகளில் பங்குபற்றி போதுமான பயண தூர தரவுகள், வேகம், மின்சார பாவனை அல்லது போக்குவரத்துச் செயற்பாடு பற்றிய தரவுகளையும் தகவல்களையும் வழங்க வேண்டும்
- முச்சக்கர வண்டியை (Three Wheeler) தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்று நிலையத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும்
- முச்சக்கர வண்டி (Three Wheeler) உரிமையாளர் 14 நாட்களுக்கு மேற்படாத மின்னியக்க வாகன மாற்றும் காலத்திலும் அதை தொடர்ந்து வரும் பதிவு செய்யும் காலத்திலும் ஏற்படும் ஏதேனும் வருமான இழப்புக்களை ஏற்க வேண்டும்.
- விண்ணப்பதாரரே தேவையான காப்புறுதி தொகையை பெறுவதற்கு பொறுப்பாவார்.

## வாகனத்தை மாற்றிமைக்கும் சேவையினை வழங்குபவர்களின் கடமைகள்

- மாற்றப்பட்ட முச்சக்கர வண்டியின் (Three Wheeler) பதிவு செய்யப்பட்ட உரிமையாளருக்கு அவ்வாகனத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றிய பயிற்சி வழங்கி அவர்களுக்கு வழங்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் தேவையான தரவுகள் மற்றும் தகவல்களை வழங்கக் கடமைப்பட்டுள்ளார்.
- செயற்பாடு மற்றும் பராமரிப்புக்கள் பற்றிய பயிற்சிகள் பயனாளிகளுக்கு வழங்கப்படும்
- வழங்கப்பட்ட முச்சக்கர வண்டியினை (Three wheeler) உள்நாட்டு மின் நிலையங்கள் மற்றும் வர்த்தக ரீதியாக காணப்படும் மின்னேற்றம் செய்யும் (charging) நிலையங்களுக்கு சென்று மின்னேற்றம் (charge) செய்து கொள்ளலாம்.
- மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் செய்யப்பட வேண்டிய், குறிப்பாக மீள் - பதிவு உட்பட்ட விடயங்களை விநியோகஸ்தர்கள் மேற்கொள்வர்.

## தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறைகள்

- மேலே பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்ட தெரிவு நிபந்தனைகளின் அடிப்படையில் தகுதிபெறும் விண்ணப்பங்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டு குலுக்கல் முறையில் (lottery) தெரிவு செய்யப்படும்
- குலுக்கலுக்காக ஒரு பொது நிகழ்வு நடாத்தப்படும்.



இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் நீங்களும் பங்குபற்றி பயனடைய விரும்பினால் அல்லது மேலதிக தகவல்களுக்கு எம்மைத் தொடர்பு கொள்ளவும் :

**074 330 9687**
**Normal calls or WhatsApp**

# உ-TUK TUK


இலங்கையின் நிலைபேறான நகர்தன்மைக்கான போக்குவரத்திற்கான ஒரு ஊக்குவிப்பு





நாட்டில் தற்போது காணப்படும் சமூக பொருளாதார நிலைமையை எதிர்கொள்ளும் முகமாகவும் நிலைபேறான போக்குவரத்து அணுகுமுறையினூடாக பசுமை மீட்சியை அடையவும் நெகிழ் திறன்மிக்க ஒரு எதிர்காலத்தை உருவாக்குதற்குமான ஒரு மாற்றுவழி.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) ஆனது, போக்குவரத்து அமைச்சு, மின்சக்தி மற்றும் எரி சக்தி அமைச்சு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுத்தும் பசுமையான, தூய்மையான மற்றும் யாவரையும் உள்ளடக்கிய இலங்கையை உருவாக்குவதற்கான இந்த மின்னியக்க போக்குவரத்து செயற் திட்டம் செயற்படுத்தபடுகிறது.



## முச்சக்கர வண்டிகளை மின்சாரத்தின் மூலம் இயங்கக் கூடிய முச்சக்கர வண்டியாக (Electric Three Wheeler) மாற்றியமைக்கும் நடைமுறையானது

- பொருளாதார நெருக்கடியின் விளைவாக மக்களுக்கு ஏற்படுத்தப்படும் சுமைகளை குறைக்கிறது.
- குறைந்த காபன் கழிவு / குறைந்த வளிமண்டல மாசடைதல், உட்படுத்தப்பட்ட மற்றும் சமமான அபிவிருத்திப் பாதையை இலங்கைக்குள் உண்டாக்க உதவுதல்.
- போக்குவரத்தை / வாகன நகர்வை இலகுபடுத்துகிறது
- சிறிய நடுத்தர வியாபார முயற்சிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை புதுப்பித்தல்.

## இந்த முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித் திட்டமானது முன்னோடி கட்டம், செயல் விளக்க கட்டம் மற்றும் துரித கட்டம் ஆகிய மூன்று கட்டங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.


- முன்னோடிக் கட்டமானது மின்னியக்க முச்சக்கர வண்டிக்கு மாற்றுவதை சோதனை செய்வதாகும்.
- செயல்விளக்க கட்டமானது நிதி நிலை மாற்றங்கள் பற்றிய விடயங்களில் ஈடுபடுவதோடு
- துரித கட்டமானது சந்தை வாய்ப்பு நிலைகளை சலுகை ரீதியிலான நிதி மூலம் மாற்றியமைக்க பயன்படுத்தப்படும்.

இந்த முன்னோடித் திட்டமானது நுண்பொருளாதார மறு மலர்ச்சி அல்லது முறைசாரா பொருளாதார நடவடிக்கையினால் பொருளாதாரத்துக்குள் நிதிப் பாய்ச்சலை உருவாக்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.


இந்தக் கட்டத்தில் பெற்றோல் மூலம் இயக்கப்படும் 200 முச்சக்கர வண்டிகளை (Three wheelers) மின்சக்தி மூலம் இயங்கக் கூடியவையாக மாற்றுவதோடு, பின்வரும் ஒவ்வொரு பிரதேசங்களிலிருந்தும் 100 முச்சக்கர வண்டிகள் இதற்காக தேர்ந்தெடுக்கப்படும்.

- ✓ மாக்கும்புற, கொட்டாவை
- ✓ கோட்டை

(Multimodel நிலையத்துக்கு அருகாமையில்)



## மின்னியக்க முச்சக்கர வண்டி (Three wheelers ) பற்றிய தொழில்நுட்ப தகவல்களும் எண்ணிக்கையும்



- ஒவ்வொரு மின் ஏற்றதித்திக்கும்: 80–100 கிலோ மீற்றர்
- மதிப்பிடப்பட்ட மாதாந்த சேமிப்பு : ரூபா **26,000**
- மின்கலத்தின் கொள்ளளவு (பேட்டரியின் capacity): 7 கிலோவாற்று மணித்தியாலங்கள் (kwh)
- மோட்டரின் கொள்ளளவு: 3 கிலோவாற்றுக்கள் (kw)
- மின்கலத்தை மின்னூட்டம (charging) செய்வதற்கான மாதாந்த மதிப்பிடப்பட்ட செலவு (ஒரு நாளைக்கு 100 கிலோ மீற்றர்களாயின்): ரூபா 13,600
- ஒரு கிலோ மீற்றருக்கான மதிப்பிடப்பட்ட விலை: ரூபா 4.56

## தகுதி பெறும் வாகனங்களும் உரிமையாளர்களும்

- ✓ பெண் உரிமையாளர்கள் அல்லது பெண் வாகன நடத்துனர்கள் / சாரதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ✓ முச்சக்கர வண்டியினது (Three Wheelers) வயது தயாரிப்பு திகதியிலிருந்து 10 வருடங்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.
- ✓ 4 விசை / 4-ஸ்ட்ரோக் (4 stroke) முச்சக்கர வண்டிகள் (Three Wheelers ) மட்டுமே தகுதியுடையவை.
- ✓ முச்சக்கர வண்டியொன்றினை (Three Wheelers) மாத்திரமே வாழ்வாதாரமாக கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- ✓ மாக்கும்புற மற்றும் கோட்டையை சேர்ந்தவர்களே தகுதியடையவர்கள்
- ✓ ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது மின்னியக்க முச்சக்கர வண்டியாக (Electric Three Wheeler) மாற்றுவதற்கான முழுச் செலவுத் தொகையையும் பொறுப்பெடுக்கும்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் நீங்களும் பங்குபற்றி பயனடைய விரும்பினால் அல்லது மேலதிக தகவல்களுக்கு எம்மைத் தொடர்பு கொள்ளவும் :

**074 330 9687**
**Normal calls or WhatsApp**